


வேலையின் போதான காயங்கள் அல்லது சுகவீனங்களு-க்கான உதாரணங்களைப் பின்வருவன உள்ளடக்கும்:

- ஒரு விபத்தினால் ஏற்படும் காயம
- ஒரேவிதமான அசைவுகளைச் செய்வதால் ஏற்படும் நோவு
- தொல்லைப்படுத்தப்படுவதனால் ஏற்படும் மனஉளைச்சல்
- உற்பத்திப் பொருட்களினால் உண்டாகும் ஒவ்வாமைத் தாக்கங்கள்

பின்வரும் சந்தர்ப்பங்களில் கூட..., வேலையில் நீங்கள் காயமுற்றாலோ அல்லது சுகவீனமுற்றாலோ, நீங்கள; WSIB கோருவதற்கு உரிமை உடையவர்களாவீர்கள்.

- காயம் அல்லது சுகயீனம் உங்கள் பிழையினால் ஏற்பட்டது என்று நீங்கள் நினைத்தல்
- காயமுறுதல் நடைபெற்றபோது நீங்கள் கைக்காசுக்கு வேலை செய்திருந்தமை
- ஒரு தற்காலிக வேலை முகவர்நிலையம் ஊடாக வேலை செய்து கொண்டிருந்தமை
- உங்கள் குடிவரவு அந்தஸ்து பாதுகாப்பில்லாது இருத்தல்

ஒன்ராறியோவில் வேலை செய்வோரில் பெரும்பாலானோர் தானாகவே WSIB மூலம் காப்புறுதி பெறுகிறார்கள்

WSIB ஆதரவுடன், நீங்கள் பின்வருவனவற்றைப் பெறமுடியும்:

- நீங்கள் காயமுற்றபோது செய்த வேலையின் வரிகள் கழித்த சம்பளத்தின் 85மூ
- மருந்துகள், உடலசைவுச் சிகிச்சை, ஏனையவை போன்ற OHIP திட்டத்தினால் காப்புறுதி அளிக்கப்படாத ஆரோக்கிய பராமரிப்பு
- மருத்துவ சந்திப்புகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து
- வேலைக்கு மீண்டும் திரும்பும்வகையில் உங்கள் வேலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் உதவி
- தேவைப்படின், புதிய ஒரு வேலைக்குத் தயார்படுத்தும் அல்லது பெற்றுக்கொள்வதற்கான உதவி

**WSIB** பற்றி விளங்கிக்கொள்ள நீங்கள் சிரமப்படுகிறீர்கள் அல்லது படிவங்களைப் பூர்த்தி செய்ய உதவி தேவை எனில், உதவுவக்கூடிய சில நிறுவனங்கள் இங்கே தரப்பட்டுள்ளன:



ஒன்ராறியோ பணியாளர்களுக்கான வேலையிட ஆரோக்கிய சிகிச்சை நிலையங்கள்:
Occupational Health Clinics for Ontario Workers (OHCOW):
1-877-817-0336 (Toll-free)
https://www.ohcow.on.ca/

பணியாளர்களது ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புசார் சட்ட நிலையங்கள்:
Workers' Health and Safety Legal Clinic:
1-877-832-6090
http://workers-safety.ca/

காயமுற்ற பணியாளர் சமூக சட்ட நிலையங்கள்:
Injured Workers Community Legal Clinic (IWC):
416-461-2411
https://www.injuredworkersonline.org/

தொழில்நிலைய விபத்தினால் பாதிக்கப்பட்டோர் குழு:
Industrial Accident Victims Group (IAVGO):
416-924-6477
https://iavgo.org/


சமூக சட்டம்சார் கல்வி ஒன்ராறியோ:
Community Legal Education Ontario (CLEO)
https://stepstojustice.ca/legal-topic/health-and-disability/workplace-injury


பணிபுரிவோர் ஆலோசகர் அலுவலகம்:
Office of the Worker Adviser (OWA):
1-800-435-8980
http://www.owa.gov.on.ca/en/Pages/default.aspx

School of Labour Studies | McMaster University

இந்தத் துண்டுப்பிரசுரத்தின் அச்சிடப்படக்கூடிய பிரதி 7 மொழிகளில் கிடைக்கிறது. http://hdl.handle.net/11375/25326

**அச்சிடும் அறிவுறுத்தல்கள்:** இந்த PDFஐச் சட்டரீதியான பத்திரங்களை அச்சிடும் தாளின் (8.5” x 14”) இரண்டு பக்கங்களில் அச்சிடவும்.
இந்தத் தாளின் மறுபுறத்தில் உள்ள புள்ளியிடப்பட்ட கோடுகளின் வழியே இந்தத் துண்டுப்பிரசுரத்தை மடியுங்கள்.
முதலில் வலது பக்கத்திலிருந்து மடியுங்கள், பின்னர் இடது பக்கத்தில் மடியுங்கள்.
மடித்த பின்னர், நீல நிறப் பகுதி முதல் பக்கமாக இருக்கும், அத்துடன் இந்த அறி-வுறுத்தல் பின்பக்கத்தில் இருக்கும்.





# வேலை செய்யும்போது காயமுற்றாலோ அல்லது சுகவீனமுற்றாலோ என்ன செய்ய வேண்டும்



## வேலை செய்யும்போது காயமுற்றாலோ அல்லது சுகவீனமுற்றாலோ என்ன செய்ய வேண்டும்

- உடனடியாக வேலை செய்வதை நிறுத்துங்கள். உங்கள் மேலதிகாரியிடம் என்ன நடந்தது என்று கூறிவிட்டு இயலுமான விரைவில் ஒரு மருத்துவரைச் சந்தியுங்கள். நீங்கள் தொடர்ந்து வேலைசெய்து பராமரிப்பைத் தாமதப்படுத்தினால், உங்கள் ஆரோக்கியம் மேலும் மோசமாகலாம் என்பதுடன் உங்கள் கோரிக்கையும் தாமதப்படுத்தப்படவோ அல்லது மறுக்கப்படவோ கூடும்.
- உங்கள் வேலை மற்றும் நீங்கள் எவ்வாறு காயமுற்றீர்கள் அல்லது சுகவீனமுற்றீர்கள் என்பதுபற்றியும் உங்கள் மருத்துவரிடம் கூறுங்கள். றுளுஐடீ படிவம் 8 ஒன்றை உங்கள் மருத்துவர் பூர்த்தி செய்யவேண்டும். உங்கள் மருத்துவர் ஆதரவளிப்பவராக இல்லாவிடில், அருகிலுள்ள வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவுக்குச் செல்லுங்கள் அல்லது வேறொரு மருத்துவரை உடனே சந்தியுங்கள்.
- உங்கள் வேலைதருனர் நிர்ப்பந்தித்தாலும்கூட, மருத்துவர் உடன்படாமல், வேலைக்குத் திரும்ப வேண்டாம்.
- WSIB படிவம் 6 ஒன்றைப் பூர்த்திசெய்து ஒரு WSIB கோரிக்கையை முன்வையுங்கள்: https://eservices.wsib.on.ca/portal/server.pt/community/eform_6/209. மிகவும் தாமதமாகிவிட்டதாக நீங்கள் நினைத்தாலும்கூட இந்தப்படிவத்தை இயலுமானளவு விரைவாக அனுப்பிவைக்க வேண்டும். உங்கள் கோரிக்கையை மருத்துவர் (படிவம் 8) அல்லது வேலைதருனர் (படிவம் 7) பூர்த்திசெய்வதன் மூலமும் ஆரம்பிக்கலாம்.
- படிவம் 6 பூர்த்திசெய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் 416 344-1000 என்ற இலக்கத்தில் WSIBயை அழையுங்கள். உங்களுக்குத் தேவைப்பட்டால் ஒரு மொழிபெயர்ப்பாளருடன் தொலைபேசிமூலம் படிவத்தைப் பூர்த்தி செய்ய அவர்கள் உதவுவார்கள். நீங்கள் படிவம் 6றை அல்லது WSIBக்கு ஒரு கடிதத்தை உங்கள் மொழியில் எழுதி அனுப்பலாம். WSIB அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொள்ளும்.
- உங்கள் வேலைதருனரோ அல்லது வேறு யாருமோ அவ்வாறு கோரிக்கை செய்ய வேண்டாம் என்று கூறியிருந்தாலும் அல்லது வேறுவகையான காப்புறுதிக்கு (உ-ம்: EI) விண்ணப்பிக்கும்படி கூறியிருந்தாலும், உங்கள் கோரிக்கையைச் சமர்ப்பியுங்கள்.
- கையெழுத்திடும் போது கையெழுத்திடுவதனால் எதற்காக ஒத்துக்கொள்கிறீர்கள் என்பது விளங்கினால் மட்டுமே பத்திரங்களில் கையெழுத்திடுங்கள்.
- எதுபற்றியாவது உங்களுக்கு நிச்சயமற்று இருந்தால், உங்களுக்குத் தெரியாது அல்லது விளங்கவில்லை என்று கூறுங்கள் அல்லது பதிலளிக்க வேண்டாம்.
- ஆலோசனை பெறுங்கள் (இறுதியில் உள்ள ஒரு மூலவளப் பட்டியலைப் பாருங்கள்). நிபுணத்துவம் அற்றவர்களிடமிருந்து ஆலோசனை பெறவேண்டாம்.
- உங்கள் விடயம் (வழக்கு) சார்ந்த எல்லாவற்றையும் பற்றிக் குறிப்புகள் எழுதிக் கொள்ளுங்கள். அத்துடன் எல்லாத் தகவல்களையும் பிரதிகள் எடுத்துக் கொள்ளுங்கள் (மருத்துவப் பத்திரங்கள், படங்கள், ஏனையவை).
- கேட்கப்பட்ட எல்லாப் படிவங்கள் மற்றும் பத்திரங்களை WSIBf;கு அனுப்புங்கள்.
- உங்கள் கோரிக்கை மறுக்கப்பட்டாலும் அதற்கு உடன்படாதிருக்க உங்களுக்கு உரிமை உண்டு. உங்கள் கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லும் WSIBகடிதத்தில் கூறப்பட்டுள்ள படிமுறைகளை உங்கள் மறுப்பைத் தெரிவிப்பதற்குப் பின்பற்றுங்கள். நீங்கள் மறுப்பைத் தெரிவிப்பதையிட்டு விரைவாக நடவடிக்கை எடுங்கள். கால எல்லைகள் உண்டு.
- உங்கள் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்கள் திட்டத்தில் உள்ளபடி WSIBயுடன் ஒத்துழையுங்கள், விதிகளையும் மேலும் அதில் கூறப்பட்டுள்ள படிமுறைகளையும் பின்பற்றுங்கள். உதாரணமாக, உங்களை மீண்டும் வேலைக்குத் திரும்பும்படி கேட்கப்பட்டிருப்பின், நீங்கள் இன்னமும் ஆயத்தமில்லாதது போல் உணர்ந்தாலும், நீங்கள் முயற்சிக்க வேண்டும்.
- உங்களுக்கு மனக்குறைகள் ஏதுமிருப்பின் WSIBயிடம் கூறுங்கள். உங்கள் திட்டத்தைப் பின்பற்றுவதை நிறுத்த வேண்டாம். நீங்கள் அப்படிச் செய்தீர்களானால், நீங்கள் உங்கள் நலன்களை இழக்கக்கூடும்.

**WSIB** தொலைபேசி அழைப்புகளுக்கும் சந்திப்புகளுக்கும் துறைசார் மொழிபெயர்ப்பாளர்களை இலவசமாகக் கொண்டுள்ளது. கடிதங்களை உங்கள் மொழியில் மொழிபெயர்த்துத் தரும்படியும் கேட்டுக்கொள்ளலாம். **WSIB** மிகவும் சிக்கலானது. குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பர் ஒருவருக்குப் பதிலாக **WSIB** மொழிபெயர்ப்பாளர் ஒருவருடன் நீங்கள் செயற்படுங்கள்.

மேலதிக தகவலுக்கு, **(416) 344-1000** இலக்கத்தில் **WSIB**யை அழையுங்கள். ஆங்கிலத்திற்கு இலக்கம் **1**றை அழுத்திப் பின்னர் பணியாட்களுக்கு இலக்கம் 1றை அழுத்துங்கள். யாருடனாவது பேசுவதற்குக் காத்திருந்து ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு வேண்டுதல் செய்யுங்கள்.

## உங்கள் மொழியில் எவ்வாறு தகவலைப் பெறுவது

WSIB இணையத்தளத்தில் தகவல்கள் கிடைக்கப்பெறும்: https://www.wsib.ca/en. இணையத்தளத்தை வெவ்வேறு மொழிகளில் எவ்வாறு மொழிபெயர்க்கலாம் என்ற அறிவுறுத்தல்கள் பின்வரும் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும்: https://www.wsib.ca/en/other-languages

மேலும், 10 மொழிகளில் பணிபுரிவோருக்கான WSIB நலன்களும் சேவைகளும் பற்றிய ஒரு வழிகாட்டி (பக்கத்தின் இறுதியில்) உள்ளது: https://www.wsib.ca/en/injured-or-ill-people/resources-injured-or-ill-people/your-guide-benefits-services-and#benefits

கூகிள் மொழிபெயர்ப்பி (https://translate.google.com/) போன்ற மொழிபெயர்ப்பு மென்பொருட்கள், உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் வேலைக்கு-மீண்டும்-வருதல் திட்டங்கள் போன்ற பத்திரங்களை மொழிபெயர்ப்பதற்கு உதவமுடியும். உங்களிடம் கணினி அல்லது இணையம் போன்ற வசதிகள் இல்லாவிடில், பொதுசன நூலகத்திற்குச் செல்லுங்கள். அங்கு நீங்கள் இலவசமாகப் பயன்படுத்தக்கூடிய கணினிகளும் இணைய வசதிகளும் உங்களுக்கு இருக்கும்.

